**O.S No.222/2014  PW1 - தவமணி ,**

த/பெ.சின்னாத்தேவர்     தேதி :29.10.2024

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

எனக்கு எழுதப் படிக்க தெரியும். நான் வாலாந்துார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். நான் பிராது தாக்கல் செய்யும்போதும், நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யும் போதும் அய்யனாகுளத்தில் குடியிருந்து வருவதாக சொல்கிறேன் என்றால் சரிதான். நான் பிராது தாக்கல் செய்யும் போது 2 சர்வே எண்களை சொத்து விபரமாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பிராது சொத்து விபரத்தில் அந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்து என விஸ்தீரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். நான் பிராது சொத்து விபரத்தில் 2 சர்வே எண்களின் மொத்த சொத்தின் அளவு 35.66 செண்ட் என்று மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல 42.66 செண்ட் என சொல்லியுள்ளேன். நான் சொத்து விபரத்தில் 42.66 செண்ட் என சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகள் எனது இரத்த உறவுகள் என்றால் பங்காளிகள் ஆவார்கள். தாவாச் சொத்தில் அவர்கள் கூட்டு சொத்து பங்குரிமையாளர்கள் என்றால் சரிதான்.

2. 6ம் பிரதிவாதி பெண் ஆவார். அவர் எங்களுக்கு ரத்த உறவில் சம்பந்தமில்லாதவர் என்றால் சரிதான். அவர் கூலி ஏழை விவசாயி என்றால் விவசாயி ஆவார். 1 முதல் 5 பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதிக்கு 2001ம் ஆண்டிலேயே சர்வே எண்.75/11ல் 3 செண்ட்டை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அன்றையதேதியிலிருந்து அந்த 3 செண்டை 6ம் பிரதிவாதி அனுபவத்தில் எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அவர் எந்த தேதி அனுபவத்திற்கு வந்தார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் வந்தார். 6ம் பிரதிவாதி 2001ம் ஆண்டிலேயே அனுபவத்திற்கு எடுத்துக்கொண்டு அதன்பின்பு மாட்டுக்கொட்டம் அமைத்து, மின்இணைப்பு பெற்று, வீட்டுவரி செலுத்தி ரசீது பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

3. நான் தாவா வழக்கிற்காக வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் தான் அனுபவத்திற்கு வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது அந்த இடத்தில் 6ம் பிரதிவாதி

கெட்டி காரை வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் வீட்டிற்கு முன்பும், பின்பும் காலியிடத்தில் மரங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த மரங்கள் அனைத்தும் சுமார் 10 வருடங்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வீடு கட்டிய பின்பு தான் மரம் வைத்துள்ளார்.

4. 6ம் பிரதிவாதி அவரது அனுபவத்தில் உள்ள 3 செண்ட் இடத்திற்கு பட்டா பெற்றுள்ளார் என்றால் உட்பிரிவு எதுவும் செய்யவில்லை. 6ம் பிரதிவாதியின் பெயர் கூட்டுப்பட்டாவில் உள்ளதா என்றால் உள்ளது. 6ம் பிரதிவாதி அவரது பெயருக்கு தனிப்பட்டா பெற்று சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுமையும் எங்களது முழு அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். தாவாச் சொத்திற்கு எனது பெயரில் தனிப்பட்டா உள்ளதா என்றால் எனது பெயரில் இல்லை. எனது பெயர் மற்றும் எனது பெற்றோரின் பெயரில் கூட்டாக பட்டா உள்ளது.

5. எனது அப்பா 1995ம் ஆண்டு இறந்துவிட்டார். அதற்கு பின்னர் தாவாச் சொத்திற்கு எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய முயற்சி எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவாச் சொத்தில் இருக்கக்கூடிய மூதாதையர் மாயாண்டித்தேவர் என்பவருடைய சொத்திலிருந்து கிடைத்தது தான் தாவாச் சொத்து என்றால் சரிதான். மாயாண்டித்தேவருக்கு சர்வே எண்.75/11 மட்டும் தான் அவருக்கு சொத்தா அல்லது அவருக்கு வேறு ஏதேனும் சொத்துக்கள் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. நான் மாயாண்டித்தேவருடைய 5வது தலைமுறை என்றால் 4வது தலைமுறை ஆவேன். தாவா சர்வே எண்.75/11 – 1ஏக்கர் 28 செண்ட் மாயாண்டித்தேவருக்கு தான் பாத்தியப்பட்டது என்பதைக் காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புலவரைபடம் தாக்கல் செய்துள்ளேன். அதற்கு பின்பு வந்த அவரது வாரிசுகளுக்கோ பட்டா, அடங்கல் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவரது பேரன் மாயாண்டித்தேவர் மகன் சின்னாத்தேவர், வெள்ளைச்சாமித்தேவர் மகன் சுப்பையாத்தேவர், குமார்தேவர் மகன்கள் சின்னன், மொக்கையன், சுப்பையா ஆகியோரது பெயரில் பட்டா இருந்தது. வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது அப்பா சின்னாத்தேவர் பெயரில் இருந்த பட்டாவைத் தாக்கல் செய்துள்ளேன்.

7. நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதா யாரிடம் விபரம் கேட்டு தாயார் செய்தேன் என்றால் எனது பெரியப்பா மகன் ராஜாமணி, பால்ச்சாமி, குபேந்திரன், சுப்பையா ஆகியோரிடம் விபரம் கேட்டேன். எனது அப்பாவும் விபரம் சொல்லியுள்ளார். மாயாண்டித்தேவர் மகனான வெள்ளை என்பவரின் அப்பா பெயர் என்ன என்றால் அவரது அப்பா பெயர் வெள்ளை (எ) மாயாண்டித்தேவர். நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதா உண்மைக்கு புறம்பானது என்றும், நான் சொன்ன நான்கு நபர்களுக்கும் மாயாண்டித்தேவர் வாரிசுகள் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. கொடிவழி ஜாபிதா குறித்து அரசு சார்பில் எந்தவிதமான சான்றும் வழங்கவில்லை என்றால் சரிதான்.

8. மாயாண்டித்தேவருடைய மகன் அவருடைய வாரிசுகள் அனைவரையும் தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா அல்லது ஒரு வாரிசினை மட்டும் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சம்பந்தப்பட்ட ஒரு வாரிசினை மட்டும் சேர்த்துள்ளேன். நான் மற்ற வாரிசுகளை சேர்க்காததால் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மற்ற 3 வாரிசுகளும் விற்பனை செய்துவிட்டார்கள். அதனால் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை. அந்த சொத்துக்களை வாங்கிய நபர்களை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் வாங்கியவர்கள் வாதி மற்றும் பிரதிவாதிகள் தான். சொத்தை வாங்கிய காந்தி என்ற குரும்பத்தேவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர் வாங்கிய ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அவரைத் தரப்பினராக சேர்க்கவில்லை.

9. நான் தாக்கல் செய்து தோராய வரைபடம் நான் தான் தயார் செய்தேன். உசிலம்பட்டியில் அன்றைய தேதியில் தலைமை சர்வேயராக இருந்த ஆசைத்தம்பி எனக்கு உறவினர் என்றால் சரியல்ல, அவருக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. ஆணையர் இடத்தை அளக்கும் போது அவர் அந்த இடத்திற்கு வந்தாரா என்றால் வந்தார். தோராய வரைபடத்தில் தாவா சொத்துக்களின் நீள அகல அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 முதல் 7 வரையிலான ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரங்கள் என்றால் சரிதான். அந்த பத்திரங்கள் 1974 மற்றும் 1975ம் ஆண்டு ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி 5 ஆவணங்களுக்கு பின்பு எதுவும் அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.9வது ஆவணத்தில் எங்களுக்கும், குயிலம்மாள் என்பவருக்கும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே எண்.75/11 A2 விஸ்தீரணம் 1.5 ஏர்ஸ் என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 பட்டா எண்.1290 சர்வே எண்.75/11C1சின்னாத்தேவர் மற்றும் குரும்பன் பெயரில் தான் கணினி சிட்டா உள்ளது என்றால் குரும்பனுக்கு 4 செண்ட் விற்பனை செய்துள்ளதால் அவர் கூட்டுப்பட்டாவாக சேர்த்துள்ளார். வா.சா.ஆ–11 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பத்திரம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. 2001ம் வருடத்தில் பிரதிவாதிகளிடம் நான் 1 செண்ட் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

11. 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தில் தற்போது தனிப்பட்டா வாங்கிவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.12 பட்டா எண்.950யை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகளின் சொத்துஅவ்வளவு தான் என்பதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கு தாக்கல் செய்த 10, 20 நாட்களிலேயே தாவா இடத்தினை ஆணையாளர் சர்வேயர் பார்வையிட வந்தார்கள் என்றால் சரிதான். அன்றைய தேதியில் ஆணையாளர் பார்க்க வந்த சமயத்தில் மழை பெய்து அந்த பகுதி முழுவதும் தண்ணீர் நிரம்பியிருந்தது என்றால் ஈரமாக அளக்கும் அளவிற்கு தான் இருந்தது இந்த அளவிற்கு இல்லை. அன்றையதினம் நல்ல மழை பெய்ததால் அளக்க இயலவில்லை என்றால் சரியல்ல. அதனால் ஆணையாளரிடம் அன்றையதினமே ஆட்சேபணை மனு கொடுத்தார்கள் என்றால் தெரியவில்லை. சரியாகத்தான் அளந்து சென்றார்கள்.

12. அன்றையதினம் உசிலம்பட்டி தலைமை சர்வேயர் ஆசைதம்பி என்றால் சரிதான். அவர் எனது உறவுக்காரர் என்பதால் தாவாச் சொத்தைப் பொறுத்து தவறான அளவீடுகளைக் கொடுத்துள்ளார் என்றால் அவர் எனது உறவினர் இல்லை. ஆணையாளர் வரைபடம் மற்றும் அறிக்கையை எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள சங்கதிகள் பற்றி தெரிந்து கொண்டு தான் குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்ற ஆணையாளர் மற்றும் சர்வேயரை சாட்சியாக விசாரிக்க விரும்புகிறேனா என்றால் விசாரிக்கவில்லை. அது முறையாக அளவீடு செய்யவில்லை என்பதால் தான் அவர்களை சாட்சியாக விசாரிக்க தயாராக இல்லை என்றால் சரியல்ல. எனது பிராதுப்படி நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

S.d./ Thavamani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.